**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.77 of 2020 |
| Prosecution Witness | : | PW1 |
| 03.12.2024. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : மூக்கையா | Calling | : | கொத்தனார் |
| Father Name | : ரெங்கசாமி | Religion | : | |
| Village | : மண்பறை | Age | : | 48 |
| Taluk | : முசிறி | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மண்பறையில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி ராதிகா என் மனைவி. ஆஜர் எதிரி எனது உறவினர். 2018 ம் வருடம் நான் துபாயில் வேலை செய்துவிட்டு அங்கிருந்து துறையூருக்கு வந்தேன். 13.10.2019 அன்று இரவு 12 மணியளவில் யாரோ கதவை தட்டினார்கள். நான் கதவை திறந்து பார்த்தபோது ஆஜர் எதிரி கத்தியை என் கழுத்தில் வைத்து அறுத்தார். அதில் எனக்கு இரத்தம் வந்தது. (சாட்சி தனது கழுத்தை காண்பித்து தனக்கு 18 தையல் போட்டதாக சாட்சியம் அளிக்கிறார்) துறையூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்னர் மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எதிரி எனது கழுத்தை அறுத்ததை பார்த்து பதட்டத்தில் வெளியே ஓடி வந்து விட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.77 of 2020 |
| Prosecution Witness | : | PW2 |

03.12.2024.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ராதிகா | Calling | : | பேக்கரி சூப்பர்வைசர் |
| Spouse Name | : மூக்கையா | Religion | : | |
| Village | : மண்பறை | Age | : | 33 |
| Taluk | : | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மண்பறையில் குடியிருந்து பேக்கரியில் சூப்பர் வைசராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனது விட்டிற்கு தேவையான ஒயரிங் செய்வதில் உதவியாக இருந்தார். அதை எனது கணவர் தவறாக நினைத்துவிட்டார். 13.10.2019 அன்று இரவு 12.30 மணிக்கு நானும்,எனது கணவரும் வீட்டில் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டு கதவை தட்டினார். எனது கணவர் கதவை திறந்தார். ஆஜர் எதிரி எனது கணவரை கழுத்தோடு பிடித்து கத்தியை வைத்து கழுத்தில் அறுத்தார். அதில் என் கணவருக்கு இரத்தம் அதிகமாக வந்தது. திருச்சி அரசு மருத்துவமனைக்கு என் கணவரை சிகிச்சைக்காக சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்